முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1315

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

06.05.2023, சனிக்கிழமை

1. ஞானபலம் கொண்ட அரங்கனே
ஞானிகளே வலம்வந்து உமக்கு அருள்புரிய
ஞானபண்டிதன் யானும் இனிதே உந்தனுக்கு
நாட்டிடுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் சித்திரை மாதம் 23 ம் நாள், 06.05.2023, சனிக்கிழமை)
2. ஆசியதும் அரங்கனுக்கு இன்னும் ஆற்றல் கூட
அரங்கனை நோக்கி அற்புதங்கள் பல நடக்க
வாசிவென்ற ஞானிகளெல்லாம் அரங்கனோடு சேர்ந்து
வையகத்தை காக்கும் மகா சூட்சும சக்தியாக இறங்க
3. இறங்கவே அற்புதத்தை ஆறுமுகன் யான்
இந்த பேருலகில் அரங்கனுக்காய் நடத்தி மகிழ்விப்பேன்
மகிழ்வுற அரங்கன் தொண்டர்களெல்லாம்
மனமுவந்து அவரவர்க்குண்டான தேவைகள்
4. வகைபட பூர்த்தியாகி அரங்கனோடு
வலுவாக இணைந்து தொடர்ந்து வையகத்தில்
வையகத்தில் ஞானவான்கள் என்கின்ற மகாசக்தியே
வல்லமைபட அவரவரும் அடைந்து தேற
5. தேறவே ஆறுமுகன் யான் தேசிகன் வழி தொடர்ந்து அருள்புரிவேன்
அருளவே அரங்கனுள் யானிருக்க ஐயமற அரங்கன் கரம்பட
மெய்ஞான தீட்சை ஏற்கும் மக்களெல்லாம்
முழுமைபெற்ற ஞானவான்களாய் ஞானிகளாய் மாற்றம் பெற
6. மாற்றம் பெற ஆறுமுகன் என்
அனுமதியும் ஆசியும் உண்டுஉண்டு
உண்டான உயர் பலம் கொண்ட அரங்கன்
உண்மைஞானம் நிறைந்த ஓங்காரக்குடிலில்

7. தொண்டர்களாக உலகோர் இணைந்து தொடர்ந்து வந்து
தெண்டனிட்டு வணங்கி தொடர் பூஜைகளும் தொண்டுகளும் தடையற
செய்து வர
உண்டாவர் உலகில் ஞானிகளாக
உலகையே மாற்றும் சக்திகளாகவும் மாறுவர்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–